**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No.828/2025 | Date | : | 03.06.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா**.2 | Taluk | : | |
| Name | : | **செந்தில்குமார்** | Calling | : | |
| Father Name | : | **நகுலன்** | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.06.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு மாவட்டம் காளிங்கராயன் பாளையம், ANA நகர், கதவு எண். 09/274/20 என்ற முகவரியில் குடியிருந்து, பவானி செங்காட்டில் உள்ள SKT கம்பெனியில் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். கடந்த 15.05.2023 ஆம் தேதி மதியம் சுமார் 02:30 மணி அளவில் எனது வீட்டின் போர்ட்டிகோவில் உட்கார்ந்திருந்தேன். அப்போது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் முருகேசன் சத்தம் போட்டுக்கொண்டே வெளியே ஓடி வந்தார். நான் என்னவென்று கேட்டபோது அவருடைய செல்போனை சார்ஜ் போட்டு வைத்திருந்ததாகவும், ஒரு நபர் உள்ளே வந்து திரும்ப செல்வதாக கூறினார் அப்போது ஒரு நபர் ஓடிக்கொண்டிருந்தார்.

2. பின்னர் நானும் முருகேசனும் அந்த நபரை துரத்தி சென்று பிடித்தோம். அந்த நபரின் கையில் முருகேசனின் செல்போன் இருந்தது. பின்னர் நாங்கள் இருவரும் அந்த நபரைசித்தோடு காவல் நிலையம் கொண்டு சென்று ஒப்படைத்தோம்.

அந்த நபரை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர் தான் நாங்கள் காவல் நிலையத்தில் ஒப்படைத்த நபர் ஆகும்.

3. முருகேசனின் செல்போனை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும் தற்போது என்னிடம் காட்டப்படும் செல்போன்தான் (அ.த.சா.பொ.1) முருகேசன் செல்போன் ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் படிவம் 91 இல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(படிவம் 91 இல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. முருகேசன் புகார் கொடுக்கும் போது நான் அவருடன் சென்றேனா என்றால் ஆமாம். என்னுடைய வீட்டிற்கும் முருகேசன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சுமார் 100 அடி தூரம் உள்ளது. நான் முருகேசன் வீட்டிற்கு சென்ற பிறகு அந்த நபரை துரத்தி சென்றோம் என்றால் இல்லை அவர் துரத்திக் கொண்டு வந்தார் பின்னர் நானும் துரத்திச் சென்றேன். என்னுடைய அலுவலகத்திற்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரம் இருக்கும். தினமும் மதிய உணவுக்கு வீட்டிற்கு வந்து செல்வேனா என்றால் ஆமாம்.

2. செல்போன் திருடிக் கொண்டு ஓடிய நபர் என்னுடைய வீட்டின் வழியாக ஓடவில்லை என்றும், செல்போன் திருடிய நபர் வேறு பக்கமாக ஓடினார் என்றும், முருகேசனின் சத்தம் கேட்டு நான் அவரின் வீட்டிற்கு சென்று அதன் பிறகு தான் நாங்கள் இருவரும் ஓடிச் சென்றோம் என்றும், அப்போது அங்கு நடந்து சென்ற எதிரியை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றும், ஆனால் செல்போனை திருடிய நபர் எதிரி இல்லை என்றும், அந்த நபர் ஓடிவிட்டார் என்றும் அவ்வாறு அந்த நபர் ஓடும்போது செல்போனை கீழே போட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றும் நாங்கள் செல்போனை எடுத்துக்கொண்டு நடந்து சென்ற எதிரியை பிடித்து

அவர்தான் செல்போனை திருடியதாக கூறி போலீசாரிடம் ஒப்படைத்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த வழியாக சென்ற எதிரியை நாங்கள் பிடித்தோம் என்றால் அந்த வழியாக அவர் மட்டும்தான் போனார் வேறு யாரும் அங்கு இல்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.03 17:19:07 +0530

Judicial Magistrate No.III,

Erode.